[10th March 1964

திரு. ஜே. மாதா கவுடர் : சார், இந்த அறிக்கையில் நீலகிரிக்கு 70 நியாய விலைக் கடைகள் என்று குறிப்பிடப் பட்டு இருக்கிறது. அதை அதிகரிக்க அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்வார்களா ?

கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்றாடியார் : இப்பொழுது நீலகிரி ஜில்லாவில் 70 ஃபேர் ப்ரைஸ் ஷாப்புகள் இருக்கின்றன. அவசியம் ஏற்பட்டு, கலெக்டர் அதிகம் வேண்டு மென்றால், அது பற்றி முயற்சி எடுக்கப்படும்.

திரு. டி. கார்ச்சா கவுடர் : சபாநாயகர் அவர்களே, நியாய விலைக்கடைகளில் ஒரு லிட்டருக்கு 39 ந.பை. என்று விற்கிறார்கள். எங்கள் ஜில்லாவில் கோவையிலே சென்ட்ரல் கோடவுன் இருக் கிறது. அங்கே 39 ந.பை. க்கு வாங்கி நீலகிரியில் உள்ள கிராமப் புறங்களிலும் அதே விலைக்கு விற்க வேண்டியிருக்கிறது. அவர்கள் ட்ரான்ஸ்போர்டு சார்ஜையும் சேர்த்து 41 அல்லது 42 ந.பை.-க்கு விற்க அனுமதி கொடுக்கப்படுமா ? இல்லாவிட்டால் ஒரு சென்ட் ரல் கோடவுனை நீலகிரியிலேயே வைத்து அரிசி ஸ்டாக் செய்தால், சௌகரியமாக இருக்கும். அப்படிச் செய்ய சர்க்காருக்கு உத்தேசம் உண்டா ?

கனம். திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்றாடியார் : அங்கத்தினர் சொல்லுகின்ற விஷயத்தை பரிசீலனை செய்த பிறகு தான் பதில் சொல்ல வேண்டும்.

•**திரு. து. ப. அழகமுத்து :** தலைவர் அவர்களே, அறிக்கையில் திருச்சிக்கு 10 நியாயவிலைக்கடைகள் என்று குறிப்பிடப்பட்டு இருக்கிறது. பொதுவாக அது, சர்ப்ளஸ் ஏரியா என்று சொல்லப் பட்டாலும், உண்மையிலேயே அங்கே அரிசி பற்றாக்குறை இருப்ப தால் பொதுவாக எல்லா மேஜர் பஞ்சாயத்துக்களிலும், நியாய விலைக் கடைகளைத் திறக்க சர்க்கார் ஏற்பாடு செய்யுமா ?

கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்றாடியார் : அவசியம் என்று தகவல் வந்தால் அது பற்றி யோசிக்கப்படும்.

திரு. எம். வி. கரிவேங்கடம் : தலைவர் அவர்களே, சேலம் நகரைப் பொறுத்தவரை, சேலம் ஜில்லாவிலே 25 நியாயவிலைக் கடைகள் திறக்கப்பட்டிருக்கின்றன. அதை அதிகரிக்க உத்தேசம் உண்டா ?

கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்றாடியார் : அவசியம் என்று கலெக்டர் ரிபோர்ட் செய்தால் முயற்சி எடுக்கப்படும்.

கனம் சபாநாயகர் : கேள்விகள் முடிவடைந்தன.

[*Note.*—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the members.]

II. GOVERNMENT BILL

THE TIRUCHIRAPPALLI KAIERUVARAM AND MATTUVARAM (EXTENSION OF APPLICATION) BILL, 1964.

THE HON. SRI V. RAMAIAH : Sir, I beg leave to introduce the Tiruchirappalli Kaieruvram and Mattuvaram (Extension of Application) Bill, 1964.

10th March 1964]

MR. SPEAKER : The question is—

"That leave be granted for the introduction of the Tiruchirappalli Kaieruvaram and Mattuvaram (Extension of Appliaction) Bill, 1964."

The motion was put and carried and leave was granted.

THE HON. SRI V. RAMAIAH : Sir, I introduce the Bill.

MR. SPEAKER : The Bill is introduced.

III.—VOTING ON DEMANDS FOR GRANTS FOR 1964–65

(1) DEMAND NO. IX—DISTRICT ADMINISTRATION AND MISCELLANEOUS.

(2) DEMAND NO. XXXII—PENSIONS.

(3) DEMAND NO. XXXIII—MISCELLANEOUS.

(4) DEMAND NO. XXXVI—OTHER MISCELLANEOUS CONTRIBUTIONS AND ASSIGNMENTS.

(5) DEMAND NO. XLV—COMMUTED VALUE OF PENSIONS.

(6) DEMAND NO. XLVII—LOANS AND ADVANCES BY THE STATE GOVERNMENT.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, on the recommendation of the Governor, I move—

"That the Government be granted a sum not exceeding Rs. 5,53,98,700 under Demand No. IX—District Administration and Miscellaneous."

திரு. பி. முருகையன் : கனம் தலைவர் அவர்களே, என்னுடைய பெயரில் உள்ள வெட்டுப் பிரேரணையை முன் மொழிகிறேன்.

"That the allotment of Rs. 5,53,98,700 under Demand No. IX—District Administration and Miscellaneous be reduced by Rs. 100."

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, on the recommendation of the Governor, I move—

"That the Government be granted a sum not exceeding Rs. 4,05,21,800 under Demand No. XXXII—Pensions."

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : கனம் தலைவர் அவர்களே, என் பெயரில் உள்ள வெட்டுப் பிரேரணையை முன் மொழிகிறேன்.

"That the allotment of Rs. 4,05,21,800 under Demand No. XXXII—Pensions, be reduced by Rs. 100."

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, on the recommendation of the Governor, I move—

"That the Government be granted a sum not exceeding Rs. 2,52,78,500 under Demand No. XXXIII—Miscellaneous."